| Article Date | Headline / Summary | Publication | Edition |
|---|---|---|---|
| 12 May 2024 | What are the reasons for increasing Car Insurance premium? | Nanayam Vikatan(Tamil) | Chennai |



டி.ஏ.ராமலிங்கம்,
முதன்மை தொழில்நுட்ப அதிகாரி, பஜாஜ் அலையன்ஸ் ஜெனரல் இன்ஷூரன்ஸ்



# கார் இன்ஷூரன்ஸ் பிரீமியம் அதிகரிக்க காரணங்கள் என்னென்ன?



இந்தியாவில் வாகனம் வாங்கும்போது வாகனத்துக்குக் காப்பீடு (*Vehicle Insurance*) எடுப்பது மிக முக்கியமாகும். வாகனக் காப்பீடு எடுப்பதில் யாருக்கும் விதிவிலக்கு இல்லை. வாகனக் காப்பீடு சட்டப்படிக் கட்டாயம் என்பதுடன், உங்கள் வாகனத்துக்குப் பாதுகாப்பையும், உங்களுக்கு மன அமைதியையும் வழங்குகிறது.

இருப்பினும், உங்கள் வாகனத்துக்கான இன்ஷூரன்ஸ் குறிப்பாக, கார்களுக்கான இன்ஷூரன்ஸ் பிரீமியம் (*Premium*) சில காரணங்களால் ஏற்ற இறக்கமாக இருக்கும். என்னென்ன காரணங்கள் கார் இன்ஷூரன்ஸ் பிரீமியத்தில் மாற்றங்களைக் கொண்டு வரும் எனத் தெரிந்துகொள்வதன் மூலம் இன்ஷூரன்ஸ் எடுக்கும்போது சரியான முடிவுகளை எடுக்க வசதியாக இருக்கும். உங்கள் கார் இன்ஷூரன்ஸ் பிரீமியத்தைஅதிகரிக்கக்கூடிய 5 காரணங்களை இனி பார்ப்போம்.

**உங்களிடம் டீசலில் இயங்கும் வாகனம் இருந்தால், அதற்கான இன்ஷூரன்ஸ் பிரீமியம் பெட்ரோலில் இயங்கும் காரைவிட அதிகம் ஆகும்!**

**1. காரின் மாடல் மற்றும் வகை...**

உங்கள் காரின் வகை மற்றும் மாடல் அதன் காப்பீட்டு பிரீமியத்தை கணிசமாக பாதிக்கிறது. உயர் மதிப்பு கொண்ட கார்கள் மற்றும் சொகுசு கார்கள் பொதுவாகவே விலையுயர்ந்த பாகங்கள் மற்றும் அதிகபட்ச பழுது பார்ப்பு செலவுகளைக் கொண்டிருப்பதன் காரணமாக, அவற்றுக்கான காப்பீடு பிரீமியம் அதிகமாக இருக்கும்.

உதாரணமாக, நீங்கள் விலையுயர்ந்த எஸ்.யு.வி அல்லது சொகுசு செடான் (*Luxury Sedan*) கார்களை வைத்திருந்தால், அவற்றின் இன்ஷூரன்ஸ் பிரீமியம், விலை குறைவான ஹேட்ச் பேக் அல்லது பட்ஜெட் செடான் கார்களுக்கான பிரீமியத்தைவிட அதிகமாக இருக்கும்.

அதே போல, காரின் இன்ஜின் வகை மற்றும் அதன் திறன் சார்ந்தும் கார் இன்ஷூரன்ஸ் பிரீமியத்தின் மதிப்பு அதிகரிக்கக்கூடும். உதாரணமாக, உங்களிடம் டீசலில் இயங்கும் வாகனம் இருந்தால், அதற்கான மோட்டார் இன்ஷூரன்ஸ் பிரீமியம் பெட்ரோலில் இயங்கும் காரைவிட அதிகமாக இருக்கும். அதற்குக் காரணம், பெட்ரோல் வாகனங்களைவிட டீசல் வாகனங்கள் விலை அதிகமாகும்.

அடுத்து, காரின் இன்ஜின் திறனைக் குறிப்பிடும் சிசியை (*Cubic Capacity - CC*) பொறுத்தவரையிலும் பிரீமியம் மாறுபடும். இந்த சிசி என்பது வாகனம் உற்பத்தி செய்யும் மொத்த ஆற்றலைக் குறிக்கிறது. காரின் சிசி அதிகமாக இருந்தால், அதற்கான பிரீமியமும் அதிகமாக இருக்கும். மேலும், சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக இருக்கும் மின்சார கார்களுக்கும் காப்பீட்டு பிரீமியம் அதிகமாக இருக்கும். இந்திய அரசாங்கம் மின்சார வாகனங்களை ஊக்குவிக்க பல்வேறு சலுகைகளை வழங்குகிறது என்றாலும், இந்த வாகனங்களில் பயன்படுத்தப்படும் விலையுயர்ந்த தொழில்நுட்பம் காரணமாக மின்சார கார்களுக்கான காப்பீட்டு பிரீமியமும் ஒப்பீட்டளவில் அதிகமாக இருப்பதைத் தவிர்க்க முடியவில்லை.

**2. காப்பீட்டுக்கான தீர்மான மதிப்பு...**

வாகனக் காப்பீட்டுக்கான தீர்மான மதிப்பு (*Insured Declared Value*) என்பது உங்கள் காரின் தற்போதைய சந்தை மதிப்பு எவ்வளவு என்பதாகும். காருக்கான இன்ஷூரன்ஸ் பிரீமியத்தில் காரின் சந்தை மதிப்பு மிக முக்கியமான காரணியாகும். இந்த மதிப்பின் அடிப்படையில் உங்கள் காருக்கான பிரீமியம் தொகையை நீங்கள் செலுத்த வேண்டியிருக்கிறது.

நீங்கள் ஒரு புதிய காரை வாங்கும்போது, உற்பத்தியாளர் நிர்ணயிக்கும் காரின் எக்ஸ்-ஷோரூம் விலையில் 95% மதிப்புக்கு நீங்கள் இன்ஷூரன்ஸ் எடுக்க வேண்டியிருக்கும். ஏனெனில், புதிய வாகனத்தின் தேய்மானம் பொதுவாக, 5 சதவிகிதமாக மதிப்பிடப்படுகிறது. இதை எக்ஸ்-ஷோரூம் விலையில் இருந்து கழிக்கும்போது, 95% என்கிற கணக்கீடு கிடைக்கும்.

காலப்போக்கில், காரின் மதிப்பானது, வாகனத்தின் வயது மற்றும் பிற காரணிகளால் குறைக்கப்படும். உதாரணமாக, நான்கு ஆண்டுகள் பழமையான காரின் சந்தை மதிப்பு, புதிய காரைவிட கணிசமாகக் குறைவாகவே இருக்கும்.




உங்கள் காருக்கு என்ன வகையான பாதுகாப்பு தேவை என்பதை மதிப்பீடு செய்து, அதற்கேற்ப காப்பீட்டாளர்கள் வழங்கும் பரவலான கவரேஜ் ஆப்ஷன்களில் இருந்து சரியானதைத் தேர்வு செய்வது புத்திசாலித்தனமாகும். உதாரணமாக, உங்கள் காரில் நீங்கள் செய்துள்ள விலை உயர்ந்த மாற்றங்கள் அல்லது கூடுதலாகப் பொருத்தப்பட்ட சாதனங்கள் போன்றவற்றைப் பாதுகாக்கும் ஆட்-ஆன் ஆப்ஷனைத் தேர்வு செய்தால், உங்களுடைய காப்பீட்டு பாலிசிக்கு அதிக பிரீமியம் செலுத்த வேண்டியிருக்கும். ஆனால், அதன் மூலம் உங்களுடைய விலைய உயர்ந்த சாதனங்களைப் பாதுகாப்பதை உறுதி செய்துகொள்ள முடியும்.

**3.. இடம் மற்றும் வாகனம் ஓடும் சூழல்...**

நீங்கள் வசிக்கும் இடம் மற்றும் வாகனத்தை ஓட்டும் சூழல் சார்ந்தும் உங்கள் காரின் இன்ஷூரன்ஸ் பிரீமியம் மாற்றத்துக்கு உள்ளாகும். அதிக போக்குவரத்து நெரிசல், விபத்துகள் அல்லது திருட்டுகளுக்கு அதிக சாத்தியங்கள் உள்ள பகுதியில் நீங்கள் வசிக்கும் போதும் அல்லது அதிக அளவில் வாகனத்தை ஓட்டும் சூழல் காரணமாகவும் காப்பீட்டு பிரீமியம் அதிகரிக்கலாம். மும்பை, டெல்லி அல்லது பெங்களூரு போன்ற பெருநகரங்களில் பொதுவாக, அதிக போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகள் அல்லது திருட்டுகள் போன்றவற்றுக்கான சாத்தியங்கள் அதிகம் என்பதால், இந்த நகரங்களில் கார்களுக்கு அதிகமான பிரீமியம்செலுத்தவேண்டியிருக்கும்.

**4. கூடுதல் கவரேஜும் மற்றும் பாலிசி பலன்களும்...**

ஆட்-ஆன் (*Add-on*) எனப்படும் கூடுதல் கவரேஜ்கள் உங்களுக்கு கூடுதல் பலன்களை அளிக்கும். அதே சமயம், இந்த ஆட்-ஆன் கவரேஜ்கள் காப்பீட்டின் பிரீமியத்தையும் கணிசமாக அதிகரிக்கும். இந்த ஆட்-ஆன் கவரேஜ்களில் பூஜ்ஜியத் தேய்மானம், இன்ஜின் பாதுகாப்பு அல்லது சாலையோர உதவி போன்றகூடுதல்பலன்களைத்தேர்ந்தெடுப்பதன் மூலம் உங்கள் காருக்குத் தேவையான கூடுதல் பாதுகாப்பைப் பெற முடியும்.

**5. காரின் பயன்பாட்டு நோக்கமும் அளவும்...**

உங்கள் வாகனத்தை எந்தளவுக்கு நீங்கள் பயன்படுத்துகிறீர்கள், எந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் பொருத்தும் உங்களுக்கான காப்பீட்டு பிரீமியம் அதிகரிக்கலாம். அதிகமான போக்குவரத்து நெரிசல், அல்லது நீண்ட தூரப் பயணம் போன்ற சூழலில் உங்களின் வாகனப் பயன்பாடு இருந்தால், வாகனத்தின் தேய்மானம், சேதம் மற்றும் விபத்துக்கான சாத்தியங்கள் அதிகமாக இருக்கும். இதனால் காப்பீடுக்கான பிரீமியமும் அதிகரிக்கும்.

மேலும், வணிகக் காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்கள், குறிப்பாக, சரக்கு டெலிவரி, டாக்ஸி போன்ற சேவைகளுக்குக் கார்களைப் பயன்படுத்தினால், அவற்றுக்கான காப்பீட்டு பிரீமியமும் அதிகமாக இருக்கும். ஏனெனில், இந்தக் காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் அபாயங்களுக்கு உள்ளாக அதிக சாத்தியங்கள் உள்ளன. எனவே, உங்கள் வாகனத்தின் பயன்பாட்டு நோக்கம் மற்றும் பயன்பாட்டு அளவு குறித்த வெளிப்படையான விவரங்களை காப்பீடு எடுக்கும்போது தெரிவிப்பதன்மூலம் சரியான கவரேஜுக்கான காப்பீட்டைப் பெற முடியும்!